கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 57 இதழ் : 11 பிப்ரவரி 2023 விலை ரூ.25/-



## மதப்பேய் ஆட்சி செய்தால் மானுடம் என்ன செய்யும்?

- ம.ரா.

## கணையாழி மின்னிதழ் சந்தா விவரம்

தனி இதழ் ரூ 25

ஓராண்டு சந்தா ரூ 275

சந்தா செலுத்துபவர்களுக்கு மின்னிதழ் அனுப்பப்படும்.

இணையத்தில் வாசிக்க அன்புகூர்ந்து
**www.kanaiyazhi.com** அல்லது
**magzter.com** பாருங்கள்..

அச்சு இதழாக வரும் வாய்ப்பு இப்போது இல்லை உங்கள் சந்தாவை மின்னிதழுக்கானதாக மாற்றலாம் அல்லது மீதித் தொகையைத் திருப்பி பெறலாம். உங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தி உதவுங்கள்.. நன்றி.

## மின்னிதழ் சந்தா செலுத்த வங்கி விவரம்

Account Name - KANAIYAZHI,
Account No. 147202000000792
Bank - INDIAN OVERSEAS BANK,
VALMIKI NAGAR BRANCH,
CHENNAI-600 041.
IFSC CODE- IOBA0001472

Kanaiyazhi Tamil Magazine

G Pay

# உள்ளடக்கம்


**நாடகம்**

கல்கி 06

**கட்டுரை**

வாசுதேவன் அருணாசலம் 21

நா. சந்திரசேகரன் 36

ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் 58

**பரிசு பெற்ற குறுநாவல்**

சந்துரு மாணிக்கவாசகம் 43

**சிறுகதை**

இலக்கியா நடராஜன் 26

**கவிதை**

ப.காளிமுத்து 20

முத்தமிழ்க் குமார் 35

வலங்கைமான் நூர்தீன் 57

அய்யனார் ஈடாடி 57

ராம்பிரசாத் 67

**கடைசிப் பக்கம்**

இந்திரா பார்த்தசாரதி 68



கட்டுரை
வாசுதேவன் அருணாசலம்

# கண்ணால் காண்பது பொய்; ஒளிப்பதிவு காட்டுவதே மெய்!

சமீபத்தில் (05 - 12 டிசம்பர் 2022) டைம் (ஆசியா) இதழில் கலாச்சாரப் பகுதியில் ஒரு திரைப்பட இயக்குநரைப் பற்றி, அமெரிக்காவின் திரைப்பட விமர்சகர் ஸ்டீஃபென்னி ஸக்காரெக் எழுதிய ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது. அரிய தகவல்கள் அடங்கிய களஞ்சியம் என்று மிகைப்படுத்தவிரும்பவில்லை. அதில் சொல்லப்பட்ட சில விசயங்கள் யோசிக்க வைத்தன; அந்தக் கட்டுரையை நேசிக்க வைத்தன. அவற்றைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற உந்துதலும் ஏற்பட்டது.

தன் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளை, தன்னுடைய பால்ய காலத்தில் திரைப்படங்களை உருவாக்குவதில் தனக்கிருந்த ஈர்ப்பை, குடும்ப நண்பர் ஒருவரோடு தன் தாய்க்கு ஏற்பட்ட உறவை அதன்பின் நிகழ்ந்த தனது பெற்றோரின் விவாகரத்தை, தனக்கும் தன் தந்தைக்குமான இடைவெளியை மற்றும் பின் ஏற்பட்ட பிணைப்பைத் தன்னுடைய 75-ஆவது வயதில் திரைப்படமாக உருவாக்கியுள்ளார், ஸ்டீஃபன் ஸ்பீல்பெர்க் (1946-). கடந்த நவம்பர் 23-ஆம் தேதியில் வெளிவந்திருக்கும் "த ஃபெய்பில்மென்ஸ்" (The Fabelmans) என்பதுதான் அந்தத் திரைப்படம். தன் மனதில் பல வருடங்களாகப் பொதிந்துகிடந்த தன் வாழ்க்கையின் அனுபவங்களை உயிர்த்துடிப்போடு திரைப்படமாக்கியுள்ளார். உடைந்து போகும் குடும்பங்களிலிருக்கும் குழந்தைகளின் மனநிலைகளை மையப்புள்ளிகளாகக் கொண்டு பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. புளித்துப்போன ஒன்றுதான். மறுக்கமுடியாது. ஆனால், "ஆயிரம் முறை, ஆயிரம் கோணத்தில் ஒன்றை நாம் பார்த்திருந்தாலும், அதுவரை பார்த்திராத கோணத்தில் நாம் பார்க்கத் தவறியவற்றைப் பார்க்கவைக்கும் ஸ்பீல்பெர்க்கின் திறமைக்கு நிகர் ஏதுமில்லை என்கிறார் ஸக்காரெக்.

தன்னுடைய 23 ஆவது வயதில் நைட் கேலரி (1969) என்ற தொலைக்காட்சித் தொடரின் ஒரு பகுதியை இயக்கியதின் மூலம் பிரபலமானார். வாழ்க்கையின் அனுபவங்கள் தந்த உண்மைகளின் நிழல்கள் இல்லாத் திரைப்படத்தை ஸ்டீஃபன் ஸ்பீல்பெர்க் உருவாக்கியதே கிடையாது என்றால் ஏற்றுக்கொள்வது சற்றுக் கடினம்தான். காரணம், அவர் இயக்கிய, ஜாஸ், ஜூராஸிக் பார்க், இண்டியானா ஜோன்ஸ், ஈ.டி,

போல்டகெய்ஸ்ட், வார் ஆஃப் த வோர்ல்ட்ஸ் போன்ற அறிபுனைத் திரைப்படங்கள் யதார்த்தத்தை மீறியவை. இவையெல்லாம் யதார்த்த உலகத்தின் நிழல்கூடப்படியாதவை. ("த ஷிண்டலர்ஸ்' லிஸ்ட்" மற்றும் "த கலர் பர்ப்பில்" விதிவிலக்குகள்.) ஆனால் இவை அனைத்தும் மறைமுகமான உருவகங்கள். தன்னுடைய வாழ்க்கையின் நிகழ்வுகளை, அனுபவங்களை உருமாற்றித் தந்துள்ளார் என்பதை அவருடைய தாயே அவருக்கு தெரிவித்ததை ஸ்பீல்பெர்க் நினைவுகூர்வதாக ஸக்காரெக் கூறுகிறார். உடைந்த குடும்பத்தின் சோகத்தை விதியாய், யதார்த்தமாய் ஏற்றுக்கொண்டு நகரும் குழந்தைகளின் உணர்வுகளைத் தன்னுடைய ஈ.டி திரைப்படத்தில் ஸ்பீல்பெர்க் மிகச் சிறப்பாகவும் நுணுக்கமாகவும் உணர்த்தியிருப்பதாக ஸக்காரெக் குறிப்பிடுகிறார். இந்த உத்தியிலிருந்து வேறுபட்டு, உடையும் குடும்பங்களின் நிகழ்வுகளை அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக் காட்டியிருப்பதுதான் தற்போது வெளிவந்திருக்கும் "த ஃபெய்ப்பில்மென்ஸ்". இதற்கு ஸ்பீல்பெர்க் வேறெந்த குடும்பச் சூழலையும் பயன்படுத்தவில்லை. தன் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை, தன் வாழ்க்கையில் உடன் பயணித்த உறவுகள் ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை மிக அழுத்தமாகப் பதிவுசெய்து திருப்தியடைந்திருக்கிறார் என்று ஸக்காரெக் கூறுகிறார்.

கண்ணால் பார்த்து அறிவதைவிட ஒளிப்பதிவுகள் காட்டும் காட்சியில்தான் உண்மைகள் அதிகம் என்ற நம்பிக்கையைத் தன்னுடைய 16 ஆவது வயதிலேயே தன் தந்தை பரிசாக வழங்கிய 8 mm ஒளிப்பதிவுக்கருவி, தனக்கு உணர்த்தியதாகத் தெரிவித்துள்ளார் ஸ்பீல்பெர்க். ஒளிப்பதிவுகள் காட்டும் உண்மைகளை மட்டுமே தான் உண்மைகளாக ஏற்றுக்கொள்வதாகவும் கூறுகிறார். தன் தாய் ஒரு குடும்ப நண்பரோடு பழகிய தருணங்களை நேரடியாகப் பார்த்திருந்தாலும், ஒளிப்பதிவுக்கருவியில் பதிவுசெய்து அதைப் பார்க்கும்போது தனக்குக் கிடைத்த அனுபவத்திலிருந்துதான் ஒளிப்பதிவுகளின் மகிமையை அறிந்துகொண்டதாக விவரிக்கிறார். தன் தாய் ஒரு காதலியின் உணர்வுகளைக் கொண்டிருந்ததை ஒளிப்பதிவுகளில் துல்லியமாக அறியமுடிந்ததாகத் தெரிவிக்கிறார். அறிந்தததை இரகசியமாகவே மனதில் புதைக்கிறார். எதிர்பார்த்தது போலவே தன்னுடைய தாய் தன்னுடைய தந்தையை விவாகரத்து செய்துவிட்டு அந்தக் குடும்ப நண்பரை மணக்கிறார். குடும்பத்தில் ஏற்படும் இந்தப் பிளவு, குழந்தைகளை வெகுவாகவே பாதிக்கின்றது என்ற உண்மையைத்தான் ஈ.டி திரைப்படத்தில் மெல்லிய இழையாக ஓடச்செய்திருக்கிறார் என்று உறுதிபடச் சொல்கிறார் ஸக்காரக். தன் குடும்பத்தின் கதையைத் திரைப்படமாகச் சொல்ல, தான் எடுத்த முடிவைத் தன் தாயிடம் ஸ்பீல்பெர்க் கூறியபோது, "நம் குடும்பத்தின் கதையை உன்னுடைய அனைத்துத் திரைப்படங்களிலும், நேரடியாக இல்லையென்றாலும், மறைமுகமாக, உருமாற்றித் தந்திருப்பதைக் காணமுடிகிறது" என்று தன் தாய் தன்னிடம் கூறியதாக ஸ்பீல்பெர்க் விவரித்ததை ஸக்காரெக் தனது கட்டுரையில் தெரிவிக்கிறார். தன் தாய் (97 ஆவது வயதில்) தன் தந்தை (103 ஆவது வயதில்) இறந்த பின்னர்தான் இந்தத் திரைப்படத்தை எடுக்க வேண்டும் என்று காத்திருக்கவில்லை என்றும், தான் தற்போதுதான் (75 வயதில்) மனதளவில் தன் குடும்ப நிகழ்வுகளைச் சொல்லத் தயாரானதாகவும் ஸ்பீல்பெர்க் கூறுவதாக ஸக்காரெக் எழுதுகிறார்.

ஸ்பீல்பெர்க் தன்னுடைய படத் தயாரிப்பு அலுவலகத்தில் பல ஓவியங்களை



வைத்துள்ளார். அவற்றில் அவருக்கு மிகவும் பிடித்தமானது – ஒரு தேகம் மெலிந்த சிறுவன் நீச்சல் குளத்தில் குதிப்பதற்கு அங்கிருக்கும் ஸ்பிரிங் போர்டின் நுனியில், முகத்தில் மிகுந்த சோகத்தைத் தேக்கிவைத்துக்கொண்டு நின்றிருப்பான். ஒவ்வொரு திரைப்படத்தைத் தொடங்கும் முன் ஸ்பீல்பெர்க்கிற்கு ஏற்படும் உணர்வை அந்த ஓவியத்திலிருக்கும் அந்தச் சிறுவன் மிகத் துல்லியமாகப் பிரதிபலிப்பதாக ஸ்பீர்பெர்க் கூறுவதையும் ஸக்காரெக் பதிவிடுகிறார்.

இளம்வயதிலேயே தன்னுடைய படப்பிடிப்புக் கருவி எவ்வாறு ஒளிப்பதிவுகளால் உணர்வுகளையும் உண்மைகளையும் ஒருவரின் மனதிற்கேற்றபடி உருமாற்றமுடியும் என்ற வித்தையைக் கற்றுத்தந்தது என்பதை விவரிப்பதே இந்தத் திரைப்படத்தின் (“த ஃபெய்பில்மென்ஸ்”) பிரதான நோக்கமாகும் என்று ஸ்பீல்பெர்க் உறுதிபடக் கூறுவதைப் பதிவிடுகிறார் ஸக்காரெக். மனிதனின் ஆழ்மனதிற்கும் திரைப்படக் காட்சிகளுக்குமான ஓர் ஆழமான உறவு இருப்பதையும் அதனுடைய நுட்பத்தை மிக நயமாக அறிந்த இயக்குநர்தான் ஸ்பீல்பெர்க் என்று சான்றளிக்கிறார் ஸக்காரெக். யாரோ ஒருவருடைய கருத்துநிலைகளை ஒளிப்பதிவுகளின் மூலம் கண்டுஅனுபவிக்க, நன்கு உணர, திரையரங்குகளில் கூட்டமாக, இருட்டில் அமர்வதென்பது மிகவும் முக்கியமானது என்று ஸ்பீல்பெர்க் குறிப்பிடுவதை ஸக்காரெக் தன்னுடைய கட்டுரையில் வியப்புடன் விவரிக்கிறார்.

ஸ்பீல்பெர்க் தன் வாழ்க்கையில் நடந்த மிக முக்கியமான ஒரு முரண்பாட்டை இந்தத் திரைப்படத்தில் மிக அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார். திரைப்படத்துறைமீது ஸ்பீல்பெர்க் கொண்டிருந்த ஈர்ப்பை அறிந்த ஸ்பீல்பெர்க்கின் தந்தை அதை விட்டுவிடும்படி அறிவுறுத்துகிறார். திரைப்படைத்துறை ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்காது என்று அழுத்தமாகவே

அறிவுரை வழங்கிய அதே தந்தைதான் தன் மகனுக்கு 8mm ஒளிப்பதிவுக்கருவியைப் பரிசாக வழங்குகிறார். இந்த முரண்பாடு தன் வாழ்க்கையில் நிகழ்ந்த மிக முக்கியமான ஒன்றாக ஸ்பீல்பெர்க் குறிப்பிடுவதாகக் கூறுகிறார் ஸக்காரெக்.

தன் தந்தையைப்போல் அல்லாமல் தான் ஓர் அழுமூஞ்சி என்று ஸ்பீல்பெர்க் தன்னை அழைத்துக்கொள்வதாகவும், குழந்தைப் பருவங்களில் தான் பார்க்க நேர்ந்த பெற்றோர்களின் மனக்குமுறல்களை, வேதனைகளை, கண்ணீரை, வெறுமையை வாழ்க்கையில் பின்னர் பல ஆண்டுகள் கழித்தும்கூட புரிந்துகொள்ள முடியாத ஒன்றாக இருந்தது என்று தன் வேதனையை ஸ்பீல்பெர்க் வெளிப்படுத்துவதாகவும் ஸக்காரெக் விவரிக்கிறார். மிகச் சாதாரணமான, வெகுவாக அறியப்பட்ட ஒரு வாழ்வியல் கருத்தில் (வாழ்க்கையில் நாம் செய்யும் தேர்வுகள்தான் நம் வாழ்க்கையின் தடத்தை மாற்றுகிறது, நிர்ணயிக்கிறது) ஸ்பீல்பெர்க் அபரிமிதமான நம்பிக்கைக் கொண்டிருந்தார் என்று அவரே தெரிவித்திருப்பது கொஞ்சம் வியப்பாகவே இருக்கிறது.

தன் சகோதரிகளுக்கு "த ஃபெய்பில்மென்ஸ்" திரைப்படத்தைக் காட்சிப்படுத்திய பின்பு அவர்களை நேரடியாக சந்திக்கத் தயக்கம் ஏற்பட்டதை ஸ்பீல்பெர்க் தெரிவிக்கும்போது அசாதாரணமாகத் தோன்றும் மனிதர்களுக்குள்ளேயும் சாதாரண மனிதர்களின் உணர்வுகள் ஒளிந்துகிடக்கின்றன என்ற உண்மையை அறியமுடிகிறது. தன் வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகளை எந்தவித அலங்காரமுமில்லாமல் அப்பட்டமாக வெளிப்படுத்தி, வாய்மையால் அகத் தூய்மை செய்து, தன் மனதைச் சின்னஞ்சிறு இறகாக மாற்றி, காற்றில் மிதக்கவிட்டு, ஒளிப்பதிவின் உதவியால் மீள் அனுபவங்களைப் பெற்று, அதை அகன்ற திரையில் ரசித்துக்கிடக்கும் ஸ்பீல்பெர்க்கின் துணிச்சல் பாராட்டுக்குரியதுதான். கண்கள் காட்டும் உண்மைகளைவிட ஒளிப்பதிவுகள் காட்டும் உண்மைகள்தான் உண்மையிலேயே உண்மையானவை என்ற அவருடைய சித்தாந்தம் வியப்பிற்குரியதுதான்.

இந்தத் திரைப்படத்தின் பெயர் (The Fablemans) ஒரு குடும்பத்தின் பெயராக அமைக்கப்பட்டு, மிகப்பெரிய குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "கதைசொல்லி" அல்லது "கதைசொல்லிகள்" என்ற மொழிபெயர்ப்பு மட்டும்தான் இந்தத் திரைப்படத்தின் கருவிற்கும் கதைக்கும் ஏற்றதாக அமையும். ஸ்பீல்பெர்க் அறிபுனைத் திரைப்படங்களைத்தான் அதிகம் உருவாக்கியுள்ளார் என்பதை நாம் அறிவோம். யதார்த்தத்திற்கும் அறிபுனைத் திரைப்படங்களுக்கும் உள்ள இடைவெளி மிகமிக அதிகம். ஆனால், இந்தத் திரைப்படம் ஸ்பீர்பெர்க்கின் அறிபுனைத் திரைப்படப் பெட்டகங்களில் பொதிந்துகிடக்கும், மறைந்துகிடக்கும், ஊடாடிக்கொண்டிருக்கும் வாழ்க்கையின் அலங்காரமில்லா யதார்த்தங்களை அறிய உதவும் திறவுகோல். எவ்வளவு சிறப்பாக வாழ்க்கையின் யதார்த்தங்களை அறிபுனைத் திரைப்படங்களின் மையப்புள்ளிகளாக அமைத்து மிகைப்புனைவுகளை மெல்லிய இழைகளாகக்கொண்டு அலங்கரித்திருக்கிறார் என்பதை அறியும்போது அவரைப் பற்றிய வியப்பு இன்னும் கூடத்தான் செய்கிறது.

சிறந்த திரைப்பட இயக்குநருக்கான மற்றும் சிறந்த திரைப்படத்திற்கான கோல்டன் குளோப்ஸ் 2023 விருதுகள் அவருக்கும் இந்தத் திரைப்படத்திற்கும் முறையே வழங்கப்பட்டுள்ளன. 2023 ஆஸ்கார் விருதுகளையும் எதிர்நோக்கி இந்தத் திரைப்படம் காத்திருக்கிறது. நாமும் காத்திருப்போம்.

vasuaruntamil@gmail.com ■